

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி காட்டூர் பகுதியில் நிறுவப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவச்சிலையை அவரது நினைவு நாளில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதனை முன்னிட்டு கழக தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து கணையாழி (மோதிரம்) அணிவித்து மாவட்ட தி.மு.க. நிகழ்ச்சி பதிவேட்டில் கையெழுத்து பெற்று நன்றி தெரிவித்தார் .

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர்

# சீதாராம் யெச்சூரி பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஆக. 13 -

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!**

**நமது தோழமையும், நாம் கொண்டுள்ள கொள்கைகளின் ஒற்றுமையும் நியாயமான, சமத்துவச் சமுதாயத்தை நோக்கிய போரில் நமது உறுதியை வலுப்படுத்துகின்றன.**

**தாங்கள் நல்ல உடல் நலமும், வலிமையும் பெற்று பல்லாண்டுகாலம் மக்களுக்காகப் பணியாற்ற விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

### முன்னாள் பிரதமர் வாஜ்பாயினால் பாராட்டுப்பெற்று விருது பெற்றவரை கைவிட்ட மோடி அரசு!

# சின்னப்பிள்ளைக்கு ‘கலைஞர் கனவு இல்லம்’ ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மகத்தான உதவி! நெகிழ்ச்சிப் பேட்டி!

மதுரை, ஆக. 13 -

**‘சொந்த வீடு இன்றி கஷ்டப்பட்ட எனது வேதனை அறிந்து வீடு கட்டித் தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி’ என்று மதுரை சின்னப்பிள்ளை நெகிழ்ச்சி தெரிவித்தார். ஒன்றிய அரசு கைவிட்ட நிலையில் தமிழ்நாடு அரசின் மகத்தான உதவியாக சின்னப்பிள்ளைக்கு கலைஞர் கனவு இல்லம் கிடைத்துள்ளது.**



முன்னாள் பிரதமர் வாஜ்பாயிடம் கடந்த 2000ம் ஆண்டு மகளிர் மேம்பாட்டிற்கென ‘ஸ்த்ரி சக்தி புரஸ்கார்’ விருது பெற்றவர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சின்னப்பிள்ளை. அப்போது வாஜ்பாய், இவரது காலில் விழுந்து ஆசி பெற்றது பரபரப்பை ஏற்படுத்தியது.

சின்னப்பிள்ளை, “தனக்கு பிரதமர் வீடு வழங்கும் திட்டத்தில் வீடு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இதுவரை வழங்கப் படவில்லை’ என்று சில மாதங்களுக்கு முன் வேதனையுடன் தெரிவித்திருந்தார். இதனை அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவருக்கு ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் வீடு உடனே வழங்கிட உத்தரவு பிறப்பித்தார்.

மாத்தூர் ஊராட்சிக்குட்பட்ட, திருவிழாப்பட்டி கிராமத்தில் அரசால் வழங்கப்பட்டுள்ள ஒரு சென்ட் வீட்டு மனையுடன், கூடுதலாக 380 சதுர அடி நிலத்திற்கான பட்டாவும், ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் சின்னப்பிள்ளைக்குப் புதிய வீடு வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

இதனையடுத்து மதுரை மாவட்ட நிர்வாகமும், மாத்தூர் ஊராட்சியும் விரைந்து செயல்பட்டு அதற்கான பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டனர். முதல்வரின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அப்போதைய மதுரை கிழக்கு தாசில்தார், பில்லுசேரியில் உள்ள அவரது வீட்டிற்கே நேரில் சென்று சின்னப்பிள்ளையைச் சந்தித்து வீடு ஒதுக்கீட்டிற்கான பட்டாவை வழங்கினார். தொடர்ந்து வீடு கட்டும் பணிகள் கடந்த மார்ச் மாதம் பூஜையுடன் துவங்கியது. தொடர்ந்து, அறை, ஹால், சமையலறை வசதியுடன், டைல்ஸ் தரை, வெஸ்டர்ன் டாய்லட்டுடன், வண்ணம் ஜொலிக்க வீடு அழகுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விரைவில் அந்த இல்லம் சின்னப்பிள்ளையிடம் ஒப்படைக்கப் பட உள்ளது. பிரதமர் வீடு வழங்கும் திட்டத்தில் வீடு வழங்குவதாக உறுதியளித்த ஒன்றிய அரசு கைவிட்ட நிலையில், தமிழ்நாடு அரசின் மகத்தான உதவியாக சின்னப்பிள்ளைக்கு இந்த கலைஞர் கனவு இல்லம் தற்போது கிடைத்துள்ளது.

இதுகுறித்து சின்னப்பிள்ளை கூறுகையில், “விரைவில் முதல்வரின் உத்தரவுக்கு பிறகு வீட்டிற்கு பால் காய்ச்சி குடியேற இருக்கிறேன். எனது வேதனை அறிந்து வீடு கட்டி கொடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு என் சார்பாகவும், என் குடும்பத்தினர் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

### திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி

# நாங்குநேரியில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## இரா.ஆவுடையப்பன் - உடன்குடி தனபால் சிறப்புரை! ஆர்.எஸ்.சுடலைக்கண்ணு தலைமை!

நெல்லை, ஆக.13 -

முதலமைச்சர் - கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றியம் சார்பில் மன்னார்புரம் விலக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் திடலில் இன்று (13.08.2024) மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.எஸ் சுடலைக்கண்ணு தலைமையில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் வாசுதேவன் பண்ணையார் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், தலைமைக் கழக பேச்சாளர் உடன்குடி தனபால் ஆகியோர் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

கூட்டத்தில் முன்னாள் எம்.பி. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானதிரவியம், மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன், எஸ்.ஏ.கே.சித்திக், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணைச் செயலாளர்கள் நம்பி, மாஞ்சோலை மைக்கேல்,ப.தமயந்தி, மாநில அணி நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், ஏரிக்ஜூடு, கிளைக் கழக செயலாளர்கள், ஒன்றிய பகுதியிலுள்ள சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்டப் பிரதிநிதி ஆறுமுகம் நன்றி உரையாற்றுகிறார்.

இதற்கான ஏற்பாடுகளை நாங்குநேரி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.எஸ். சுடலைக்கண்ணு செய்துள்ளார்.

முன்னாள் சைதை சட்டமன்ற உறுப்பினர்
தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர்
**வை.பெருமாள்**
அவர்களின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல்

இறுதி மூச்சுவரை இயக்கத்திற்காக உழைத்த உத்தமன் என “தலைவர் கலைஞர்” அவர்களால் பாராட்டப்பட்ட எங்கள் குடும்பத் தலைவர் “வை.பெருமாள்” அவர்களின் கழகப் பணியினை, தியாகத்தை போற்றும் நிகழ்வுகளை **“பாட்டாளிகளின் உயிர் தோழன் வை.பெருமாள்”** என்ற தலைப்பில் உருவாக்கிட வழிவகை செய்த
**மாண்புமிகு தமிழக முதல்வர் - கழகத் தலைவர்**
**மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும்
**முரசொலியின் இளைஞர் அணி பாசறை** பகுதியில் வெளியிடச் செய்த
மாண்புமிகு அமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர்
**உதயநிதி ஸ்டாலின்** அவர்களுக்கும்
இந்நினைவுநாளில் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறோம்.

*என்றும் உங்கள் வழியில்*
**பா.நவலடி ராஜா** MCA., LLB.,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்
நாமக்கல் மேற்கு மாவட்டம்

**வை.பெருமாள் குடும்பத்தினர்**
வழக்கறிஞர் **செல்லப்பா பாலசுப்ரமணியன்** குடும்பத்தினர்
பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம்.

13.08.2024




தி.மு.கழகத்தினுடைய ‘பீமசேனன்’ வை.பெருமாள் என்று சொன்னால் அது மிகையாகாது